[1973 பிப்ரவரி 12

பகுதி, கடலூர் பகுதி, காஞ்சிபுரம் பகுதி, தஞ்சாவூர் பகுதி, நாகப்பட்டினம் பகுதி, ஸ்ரீரங்கம் பகுதி, புதுக்கோட்டை பகுதி, சென்னை மாநகராட்சிப் பகுதி ஆகிய இந்தப் பகுதிகளில் இந்தக் கடமைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த எட்டு பகுதிகளில் மாத்திர மல்லாமல் ஒவ்வொரு நகராட்சி இருக்கும் இடங்களிலும் இம்மாதிரி கொசுக்களினால் ஏற்படக்கூடிய வியாதியைத் தடுக்க அதற்குரிய அமைப்பு ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இரண்டு விதமான கொசுக்களை ஒழிக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஒன்று, யானைக் காலைத் தோற்றுவிக்கும் இனத்தைச் சேர்ந்த கொசுக்களின் வகை. மற்றொன்று, மலேரியா போன்ற நோய்களுக்குக் காரணமான வகை. பொதுவாக, கொசு ஒழிப்புப் பணி அல்லது சாக்கடைத் துப்புரவுப் பணி வேறு வேறு வகைகளால் அரசாங்கத்தாலும் நகராட்சி மன்றங்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. வை. பாலசுந்தரம் : கொசுவின் மூலம் இத்தகைய வியாதிகள் பரவுகின்றன என்று சொல்லப்படுகிறது. தனியாரிடமிருந்து இதற்காக வாங்கப்படுகின்ற மருந்துகளில் மிலாதியான், பைல்திரன் போன்ற கெமிகல்களை அதிகமாக அவர்கள் சேர்ப்பதில்லை என்று கூறப்படுகிறது. ஆகவே, அரசே இப்படிப்பட்ட மருந்துகளைத் தயார் செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த மருந்துகள் மத்திய அரசாங்கத்தின் மூலம் அவ்வப்போது வாங்கப்பட்டு அந்தந்த நகராட்சி மன்றப் பகுதிகளிலும் வேறு வேறு இடங்களிலும் தெளிக்கப்படுகின்றது. மருந்துகள் தரக்குறைவாக இருக்கிறது என்று கூறப்படவில்லை. அந்த மருந்துகளைத் தெளிக்கின்றபோது கலந்து தெளிக்கும் நிலைமை இருக்கும் காரணத்தால் சரியாகக் கலக்காததன் காரணமாக தவறு ஏற்பட்டிருக்கலாம். மூன்று நாட்களுக்கு ஒரு முறை, ஏழு நாட்களுக்கு ஒரு முறை தெளிப்பதற்கான நிலைமைகள் இருக்கின்றன. ஆங்காங்கு இருக்கின்ற சிறு சிறு அலுவலர்களால் ஏற்படுகின்ற தவறுகளைக் கண்காணிக்க துணை இயக்குநர் இருக்கிறார். அவர்களின்கீழ் மாவட்ட நலத் துறை அலுவலர்கள் இருக்கிறார்கள்.

1973 பிப்ரவரி 12]

திரு. நா. வீராசாமி : இந்தக் கொசுக்களை ஒழிப்பதில் முனிசிபாலிடிகளும், அரசாங்கமும் இரண்டு பிரிவுகளாக வேலை செய்கின்றன. ஆகவே முனிசிபாலிடியினர் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் இந்தக் கொசு ஒழிக்கும் பணியைச் செய்வார்கள் என்று நினைப்பதும், முனிசிபாலிடியைச் சேர்ந்தவர்கள் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் செய்வார்கள் என்று நினைப்பதுமாக இரண்டு பேர்களுமே பேசாமல் இருந்து விடுகிறார்கள். இதனால் அந்தப் பணி நடைபெறாமலே போய்விடுகின்றது என்பது உண்மையா? ஏதாவது ஒரு துறையின் மூலமாகப் பணத்தைச் செலவழித்து கொசுக்களை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நகராட்சி மன்றத்தில் உள்ளவர்கள் அந்த முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டால் அவர்களிடம் வழங்கலாமா என்பதுபற்றி ஆலோசனையில் இருக்கிறது. எந்த வகையில் அதற்கு நகராட்சி மன்றங்கள் ஏற்றுக் கொள்ள முன்வந்தன என்று இப்போது தெரிவிக்க இயலவில்லை.

திரு. மா. வே. நாராயணசாமி : அப்படி நகராட்சி மன்றங்கள் கொசு ஒழிப்புப் பணியை முழுமையாக ஏற்றுக் கொள்ள முன் வந்தாலும் கூட, இந்தப் பணி மத்திய அரசினுடைய மானியத்தின் அடிப்படையில் செய்யப்படுகிற காரணத்தால் நகராட்சிகள் இந்தப் பணியைச் செய்ய ஆரம்பித்தால் அந்த மானியம் நகராட்சிகளுக்கு அளிக்கப்படமாட்டாது என்று திட்டவட்டமாக அறிவித்து வருகிறார்கள். அதை ஆராய்ந்து அந்தக் குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதுபற்றி ஆலோசித்துத்தான் விடை அளிக்க முடியும்.

சென்னை பொது மருத்துவமனை

* 125 வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் உள்ள நோயாளிகள் படுக்கும் வார்டுகளில் கரப்பான் பூச்சிகள் அளவிற்கு அதிகமாக பெருகி இருக்கின்றன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதை ஒழிக்க என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

[1973 பிப்ரவரி 12

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) அரசு பொது மருத்துவ மனையில், அளவுக்கு மீறி பெருகவில்லையென்றாலும் கரப்பான் பூச்சி யினால் சிறு தொல்லை இருந்துதான் வருகிறது.

(இ) உடல்நல ஆய்வாளரின் கண்காணிப்பில், மருத்துவ மனையின் எல்லாப் பகுதிகளிலும் நோயாளிகள் படுக்கும் கட்டில்கள் மற்றும் அவர்களின் படுக்கைகளுக்குப் பக்கத்தில் வைக்கப்பட் டிருக்கும் உணவு வைக்கப்படும் அறை மூடிகளிலும் கூட முறையாகப் பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிக்கப்படுவதோடு, இத்தொல்லையை ஒழிக்க எல்லா முயற்சியும் எடுக்கப்படுகிறது.

திரு. கே. ஏ. வகாப் : அமைச்சர் அவர்கள் கரப்பான் பூச்சிகள் அதிகமாக இல்லையென்று சொன்னார்கள். ஆனால் அங்கு சென்று பார்த்தால் அங்குள்ள பைப்புகளில் இவை புற்று வைத்து உற்பத்தி யாவதாகத் தெரிகிறது. நீர் போகின்ற குழாய்கள், சாக்கடை பைப்புகள் ஆகியவற்றை சரியாகச் சுத்தம் செய்தால் இவற்றை ஒழிக்க முடியும். எப்படியாவது இந்தக் கரப்பான் பூச்சிகளை ஒழிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : என்னுடைய வீட்டிலேயே உள்ள சுத்தம் செய்த குழாய்களிலிருந்து இத்தகைய பாச்சைகள், காக்ரோச்சஸ் வந்து கொண்டுதான் இருக்கின்றன. குழாய்களைச் சுத்தம் செய்வதால் மட்டும் இதை அழித்துவிட முடிவதில்லை. இவற்றை அடியோடு ஒழிக்க மருந்து வகைகள் இல்லை. ஓரளவுக்குத் தான் கட்டுப்படுத்த முடிகிறது.

திரு. எஸ். வடிவேல் : ஆஸ்பத்திரிகளில் கரப்பான் பூச்சி தொல்லையை விட மூட்டைப் பூச்சி தொல்லை ரொம்ப அதிகமாக இருக்கிறது. மூட்டைப் பூச்சியை ஒழிக்க முதலில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இவற்றை ஒழிப்பதற்காக இன்றைக்கு இருக்கிற நவீன முறைப்படி என்னென்ன மருந்துகள் பயன்படுத்தப்பட வேண்டுமோ அவை பயன்படுத்தப்படுகிறது. இந்தப் பூச்சிகளை ஒழிக்க இன்னொரு பூச்சிதான் உண்டாக வேண்டும். அது எந்தப் பூச்சி என்று இன்னும் தெரியவில்லை.